O.S. No.4/2023

04.02.2026

**வா.சா.1**

**திரு பாரதிஜீவா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (2 ம் பிரதிவாதி தரப்பில்)**

இடத்தை எனக்கு பதிவு செய்து கொடுக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2 ம் பிரதிவாதி வசந்தா எனக்கு தாவா சொத்தை கிரய சாசனம் பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று கோரி தாவா தாக்கல் செய்துள்ளேன். 2 ம் பிரதிவாதி நேரடியாக என்னிடம் எந்த ஒப்பந்தமும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. 03.09.2020 தேதியிட்ட கிரய ஒப்பந்த ஆவணத்தைதான் நான் இந்த வழக்கில் பிரதானமாக தாக்கல் செய்துள்ளேன். அ.சா.ஆ.1யை எழுதிக் கொடுத்தவர் 1ம் பிரதிவாதி பார்த்தீபன் ஆவார். பார்த்தீபன் 2 ம் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் என்ற வகையில்தான் எனக்கு ஒப்பந்தம் எழுதி கொடுத்தார். 1ம் பிரதிவாதி என்னுடைய சகலை உறவு முறை என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி ஆவணங்கள் எழுதும்போது நான் சாட்சி கையொப்பம் போடுவது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.04 17:04:25 +0530

வழக்கம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எழுதுவதற்கு முன்பாக பார்த்தீபனுக்கு வசந்தா எழுதிக் கொடுத்த பவர் பத்திரத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த பவர் பத்திரத்தின் அசலை நான் பார்க்கவில்லை, நகலை பார்த்தேன். வா.சா.ஆ.2 யை நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்து 21.11.2022 ல் வாங்கினேன். ஆனால், அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே பவர் பத்திரத்தின் நகலை பார்த்தீபன் வழங்கி அதை நான் பார்த்தேன். பவர் பத்திரம் பதிவானதுதான். பவர் பத்திரத்தின் நகல் என்வசம் வீட்டில் உள்ளது. ஆனால், அதை நீதிமன்றத்தில் என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. வழக்குரையுடன் என்னிடம் காட்டப்பட்ட பவர் பத்திரத்தை தாக்கல் செய்யாததற்கு சொல்ல இயலாது. தாவாவிற்கு தொடர்புடைய அசல் உரிமை ஆவணம் என்னிடம் உள்ளது. வா.சா.ஆ.6, 06.08.1989 கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலாகும். அசல் பத்திரம் என்வசம் உள்ளது. நான் தாவா சொத்தை பொறுத்து ஏதேனும் உரிமையுள்ளதா என்பதை பார்க்க நடவடிக்கை எடுத்தேன். அவ்வாறு நான் நகல் பெற்றது கிரய ஒப்பந்த தேதியான 03.09.2020 க்கு பின்னர்தான். வா.சா.ஆ.6 யை 20.03.2017 ல்தான் பதிவு அலுவலகத்தில் வாங்கினேன். கிரய ஒப்பந்தம் செய்வதற்கு வெகுநாட்களுக்கு முன்னதாகவே வா.சா.ஆ.6 யை வாங்கிவிட்டேன். 16.08.1989 தேதியிட்ட வசந்தா பெயரில் ஏற்பட்ட அசல்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.04 17:04:31 +0530

கிரய சாசன ஆவணம் என்னிடம் உள்ளது. அதை வழக்குரையுடன் தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. அசல் கிரய ஆவணம் மற்றும் அசல் பவர் பத்திரம் ஆகியவை பார்த்தீபனால் கையகப்படுத்தப்பட்டுவிட்டது என்பதால்தான் நகல்களை முன்னிலை படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. பார்த்தீபன், வசந்தாவிடம் எழுதி வாங்கிய அதிகார முகவர் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேன். 1997 ம் ஆண்டிலிருந்தே தாவா சொத்தை கையகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நானும் பார்த்தீபனும் வஞ்ச கூட்டாக சேர்ந்து ஆவணங்களை உற்பத்தி செய்தோம் என்றால் தவறு. அதன் காரணமாகத்தால் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் நகல்களை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. தாவா சொத்தின் கிரய ஒப்பந்தம் 9 ம் மாதம் 2020 ம் ஆண்டு ரூ.33,84,000/-க்கு பேசப்பட்டது. அன்றைய தேதியில் ரூ.35,00,000/-யை நான் வீட்டில் வைத்திருந்தேன். இந்த தொகையை நான் வங்கியிலிருந்து எடுக்கவில்லை. விவசாயம் செய்கிறேன், தேங்காய் மற்றும் கோழி வியாபாரம் செய்கிறேன். மேற்படி தொகை எனக்கு வருமானமாக வந்ததற்கு நான் கணக்கு எதுவும் வைத்துக் கொள்ளவில்லை. 19.03.2020 லிருந்து 02.10.2022 வரை உலகளவில் ஊரடங்கு காலம் என்றால் சரி. அதாவது கொரனா

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.04 17:04:38 +0530

பாதிக்கப்பட்ட காலம். ஆனால், என் வியாபாரம் எதுவும் பாதிக்கப்படவில்லை. அவ்வாறு பெரும் பணத்தை வீட்டில் வைத்திருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. பார்த்தீபனுடன் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லப்படும் கிரய ஒப்பந்தத்திற்கு அவரது மனைவியான 2ம் பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்த்ததற்கு என்ன காரணமென்றால் நானும் பார்த்தீபனும் வசந்தாவை பார்த்து முறையிட்டபோது தான் அதை சரிசெய்து தருவதாக என்னிடம் கூறினார். அவர் என்னிடம் ஆயுள் சான்று கொடுத்தார், அது என்வசம் உள்ளது. அதை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். ஆனால், நீதிமன்றத்தில் தாக்கல் இல்லை. மேற்படி விபரங்களை நான் கற்பனையில் சொல்கிறேன் என்றால் தவறு. 03.09.2020 ல் ரூ.32,00,000/- முன்பணமாக கொடுத்தது உண்மையல்ல என்றால் தவறு. நானும் பார்த்தீபனும் சுமூகமான நட்பில்தான் உள்ளோம். இந்த வழக்கில் பார்த்தீபன் தோன்றாதரப்பினராக இருந்து விட்டார் என்றால் சரி. பார்த்தீபன் தாவா சொத்து தொடர்பாக மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வசந்தா, சுதாநாயகி, சார் பதிவாளர் மற்றும் மாவட்ட பதிவாளர் ஆகியோருக்கெதிராக ஒரு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. பார்த்தீபன் எடுக்கும் சட்ட நடவடிக்கைகள் முழுதும் எனக்கு தெரியும் என்றால் சரி. எதனால் பார்த்தீபன்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.04 17:04:44 +0530

மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தற்சமயம் இம்மாமன்றத்திற்கு மாறுதலாகி அ.வ.எண் 10/2025 என பதிவாகி இவ்வழக்குடன் இணைந்து வருகிறது. பார்த்தீபன் எதற்காக வழக்கு போட்டார் என்று எனக்கு தெரியாது. பார்த்தீபன் இந்த வழக்கில் தோன்றா தரப்பினராக உள்ளார் என்றால் சரி. நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துகொண்டு வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் தவறு. நானும் பார்த்தீபனும் சட்ட விரோதமாக ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் வா.சா.ஆ.1 என்றால் தவறு. பல வருடங்களுக்கு முன்பே நானும் பார்த்தீபனும் கூட்டாக தயார் செய்த பவர் பத்திரத்தை வசந்தா ரத்து செய்து விட்டார் என்றால் தவறு. பவர் பத்திரத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொண்டேன் என்று எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் தவறு. வா.சா.ஆ.1 எழுதுவதற்கு 10 நாட்களுக்கு முன்பு ஸ்டாம்ப் வாங்கியிருக்கலாம். வா.சா.ஆ.1 எங்கு, யாரால் எழுதப்பட்டது மற்றும் தட்டச்சு செய்யப்பட்டது என்ற விபரங்கள் அதில் காணப்படவில்லை என்றால் சரி. வழக்கை தாக்கல் செய்வதற்காகவே வா.சா.ஆ.1 அவசர கதியில் வா.சா.ஆ.1 தயார் செய்யப்பட்டது எனவும் அதனால்தான் அதில் விபரங்கள் இல்லை எனவும் சொன்னால் தவறு. 2 ம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.04 17:04:50 +0530

பிரதிவாதிக்கு வழக்கு தாக்கல் செய்யும் முன்னதாக எனக்கு கிரய சாசனம் செய்து கொடுக்குமாறு கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரி. சுதாநாயகிக்கு அவரது தாயார் வசந்தா எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் விபரத்தை 2022 ம் ஆண்டு 10 ம் மாதத்தில் தெரிந்து கொண்டேன். சுதாநாயகிக்கோ, வசந்தாவிற்கோ இது தொடர்பாக வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரி. மோசடியான கிரய சாசன ஒப்பந்தத்தை நானும் என் சகலை பார்த்தீபனும் வஞ்ச கூட்டாக சட்ட விரோதமான லாபம் அடையும் நோக்கத்துடன் வசந்தாவின் காலாவதியான பவர் பத்திரத்தை வைத்து இவ்வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் தவற. பவர் பத்திரத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி வேறு ஏதாகிலும் சட்டபடியான ஆவணம் ஏதாகிலும் ஏற்படுத்தியிருந்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. அது குறித்து அவர்தான் சொல்ல வேண்டும். வசந்தா ஆயுள் சான்று கொடுத்தார் என்ற விபரத்தை என்னுடைய பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ நான் தெரிவிக்கவில்லை. வசந்தா, சுதாநாயகிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் தவறு.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.04 17:04:56 +0530

**குறுக்கு விசாரணை (4, 5 பிரதிவாதிகள் தரப்பில்)**

4ம் பிரதிவாதி சட்ட விதிகளுக்குட்பட்டுதான் ஆவண எண் 4426/2022 பதிவு செய்துள்ளார் என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது. நீதிமன்றம் இறுதியாக பிறப்பிக்கும் தீர்ப்பிற்கு ஏற்றவாறு நடக்க 4ம் பிரதிவாதி தயாராக உள்ளார் என்றால் அதுகுறித்து நான் கருத்து கூற இயலாது. 4 மற்றம் 5 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றால் தவறு. தாவா செலவு தொகை குறித்து 1 முதல் 3 பிரதிவாதிகள் வசமே நான் கோர இயலும் எனவும் 4, 5 பிரதிவாதிகள் வசம் கோரியிருப்பது தவறு என்றால் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.04 17:05:19 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.